# கஹடகஸ்திகிலிய பிரதேச சபை
# அநுராதபுர மாவட்டம்

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மே 31 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 ஏப்ரல் 01 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கஹடகஸ்திகிலிய பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை என்னால் தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் மற்றும் அதன் மூலம் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்பட்டிருந்த தாக்கம் தொடர்பான பொழிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| | குறைபாடுகளின் தன்மை | விடயங்களின் எண்ணிக்கை | நிதிக்கூற்றுக்கள் மீதான தாக்கம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | வருமானம் | செலவினம் | சொத்துக்கள் | பொறுப்புக்கள் |
| | | | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 |
| (அ) | நிதிக்கூற்றுகளிலிருந்து விடுபட்டவை | 02 | 299 | - | - | - |
| | - மேற்படி - | 01 | - | 63 | - | - |
| (ஆ) | நிதிக் கூற்றுக்களில் குறைத்துக் காட்டுதல்கள் | 02 | - | - | 648 | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | - மேற்படி - | 01 | - | 63 | - | - |
| | மேற்படி - | 01 | - | - | - | 403 |
| (இ) | நிதிக்கூற்றுகளிலிருந்து விடுபட்டவைகள் | 04 | - | - | 604 | - |
| | மேற்படி - | 02 | - | - | - | 5,793 |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களில் பொருத்தமற்ற வெளிப்படுத்தல்கள் | 01 | - | - | 783 | - |

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

03 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,395,877 ஆக இருந்ததுடன், பட்டோலைகள்/அறிக்கைகளின் பிரகாரம் அத்தகைய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 1,420,507 ஆக இருந்தது.

### 1.3.3 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 208,219 ஆக இருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 1,376,223 கூட்டுத்தொகையான 02 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த / மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,601,483 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,687,102 ஆக இருந்தது.

## 2.2 நிதிக்கட்டுப்பாடு

2010 திசெம்பர் மாதத்தின் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்தும் வங்கிக்கு முன் வைக்கப்படாத செல்லுபடிக் காலம் முடிவடைந்த ரூபா 25,166 கூட்டுத்தொகை பெறுமதியான 02 காசோலைகள் தொடர்பாக இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 396 மற்றும் அதன் உப பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப் பட்ட | உள்ளவா றான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பி டப்பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (அ) | வீதவரியும் வரியும் | 609 | 64 | 911 | 118 | 691 | 426 |
| (ஆ) | வாடகை | 2,596 | 2,536 | 191 | 2,116 | 2,012 | 213 |
| (இ) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 606 | 754 | 66 | 587 | 692 | 73 |
| (ஈ) | ஏனைய வருமானம் | 2,462 | 1,344 | 2,110 | 9,357 | 7,676 | 1,543 |

### 2.3.2 நீதிமன்ற தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்றமொன்றில் 2010 திசம்பர் 31 வரை அறவிடப்பட்டு பிரதம செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ள தண்டப்பணம் ரூபா 1,057,131 ஆனது சபைக்கு கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.3.3 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 441,300 தொகை முத்திரைக் கட்டணங்களாக கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.3.4 ஆதன வரி

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிலுவை ஆதனவரியை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாமையினால் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 910,813 ஆன நிலுவை ஆதனவரி மீதியொன்று எழுந்திருந்ததுடன் அதில் ரூபா 318,700 அல்லது 35% ஆனது 03 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய நிலுவை மீதியாகும்.

### 2.4 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதீடு செய்யப்பட்டது | உள்ளவாறான | முரண் | பாதீடு செய்யப்பட்டது | உள்ளவாறான | முரண் |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| **மீண்டுவரும் செலவினம்** | | | | | | |
| ஆளணி வேதனம் | 8,500 | 8,426 | 74 | 7,688 | 7,221 | 467 |
| ஏனையவை | 2,300 | 2,278 | 22 | 3,717 | 2,163 | 1,554 |
| உப மொத்தம் | 10,800 | 10,704 | 96 | 11,405 | 9,384 | 2,021 |
| மூலதனச் செலவினம் | 14,200 | 14,198 | 02 | 13,225 | 12,733 | 492 |
| மொத்தம் | 25,000 | 24,902 | 98 | 24,630 | 22,117 | 2,513 |

## 2.5 மனித வள முகாமைத்துவம்

### 2.5.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி

(அ) 2010 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | பதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|---|
| (அ) | பதவி நிலைத்தரங்கள் | 01 | 01 |
| (ஆ) | இரண்டாம் தரங்கள் | 08 | 07 |
| (இ) | ஆரம்ப தரங்கள் | 19 | 12 |
| (ஈ) | வேறு (அமைய / தற்காலிக) | - | 13 |
| | மொத்தம் | 28 | 33 |

(ஆ) சபையினால் மீளாய்வாண்டில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கையை விஞ்சி 04 பதவிகளுக்காக 13 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு ரூபா 1,082,209 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தன.

## 2.6 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.6.1 செயற்பாடற்ற சொத்துக்கள்

வடமத்திய மாகாண பிரதம அமைச்சின் ஊடாக அரிசி மா உற்பத்தியுடன் அண்மித்த பேக்கரி உற்பத்தி செயற்திட்டத்தினை ஆரம்பிப்பதற்காக 2008 ஆம் ஆண்டில் ரூபா 686,500 பெறுமதியுடைய உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தன. 2010 ஆம் ஆண்டில் கோன்வெவ நூலகக் கட்டிட வளவினுள் ஸ்தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட இச் செயற்திட்டத்திற்கு கிடைத்திருந்த கருவிகளைப் பொருத்தவதற்காக ரூபா 297,719 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக உரிய கட்டிடத்திற்கு பாதுகாப்பினை வழங்குவதற்காக சபை நிதியத்திலிருந்து சம்பளம் செலுத்தி ஊழியர் ஒருவரும் ஈடுபடுத்தப்பட்டிருந்தும் கணக்காய்வுத் திகதியான 2010 திசெம்பர் 31 வரையிலும் எவ்வித உற்பத்திச் செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்படாமையினால் செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்தப்பட்ட சகல பணமும் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

### 2.6.2 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,286,574 ஆக இருந்ததுடன், 01 ஆண்டு காலத்தினை விஞ்சி அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 20,238 ஆக இருந்தது.

### 2.6.3 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

பௌதீக பரிசோதனை/ மெய்மையாய்வுச் சபை அறிக்கைமூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறமதி அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 24,007,619 ஆகும்.

## 2.7 செயலாற்றல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் மக்களின் வசதிக்காக, நலன்புரி நடவடிக்கைகளுக்குரிய செயற்பாடுகள் மற்றும் சுகாதாரம், பொது வீதிகள் பொதுப் பயன்பாடு சேவைகளுக்குரிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக எதிர்வரும் வருடங்களின் செயற்பாடுகளுக்குரிய திட்டங்கள் உள்ளடக்கபட்ட கூட்டுத்திட்டமொன்றும் அத்திட்டத்தில் மீளாய்வாண்டினுள் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.8 ஒப்பந்த நிருவாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

### செயற்திட்டங்களை அமுல்படுத்துவதில் தாமதம்

(அ) 2010 இன் வேலைப் பதிவேட்டின் பிரகாரம் ஜாதிகசவிய கமநெகும செயற்திட்டங்களின் கீழ் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 3,280,749 ஆன 07 வேலைகள் 2010 ஆம் ஆண்டில் குறிப்பிட்ட திகதியில் வேலை பூர்த்தி செய்யப்பட்டிராததுடன் ரூபா 593,675 பெறுமதியான இரண்டு வேலைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எஸ்சீஏ/1 ஆம் இலக்க இக்டாட் அறிவித்தல் கோவையின் இல. 56 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்தங்களுக்காக கொடுப்பனவு செய்யும் போது குறிப்பிட்ட அளவிடைகளில் உள்ளதன் பிரகாரம் பெறப்பட்ட அளவுகளின் பிரகாரம் இயந்திர மணிக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ள முடியாதிருந்த போதிலும் மீளாய்வாண்டினுள் வாராந்த சந்தை வளவில் கிரவல் இடுவதற்காக இயந்திர மணி அடிப்படையில் 2.3 மணித்தியாலயத்திற்காக ரூபா 8,050 கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.

## 2.9 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தினுள் போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

## 3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்த நிருவாகம்